R. egistered as a NewsPaper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5·00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்


# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    மாசி 17    (29-02-1992)    சனிக்கிழமை    ஓசை: 11


## தடுத்து வைக்கப்பட்ட 72 பேருக்கு நஷ்டஈடு

சட்டத்திற்கு புறம்பான வகையில் பூசா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எழுபத்திரண்டு பேருக்கு நட்டஈடாக மூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரம் ரூபாவை பாதுகாப்பு அமைச்சு வழங்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 1990, 1991ஆம் ஆண்டுகளில் பூசா முகாமில் "தடுத்து வைக்கப்பட்ட இவர்களின் அடிப்படை மனிதஉரிமை கள் மீறப்பட்டிருந்ததாகவும், அரசியல்அமைப்பின் 13(2) (5ம் பக்கம்பார்க்க)

## வாழைச்சேனையில் கடும் சண்டை

# புலிகளின் மற்றுமோர் வீரசாதனை

# 20 இராணுவம் பலி: பலர் காயம்

### சடலங்களை கைவிட்டு படையினர் ஓட்டம்

(மட்டக்களப்பு)

சுற்றிவளைக்க வந்த சிங்கள இராணுவ அணியொன்றை இடைமறித்து தாக்கி தென்தமிழீழத்தில் மற்றுமோர் வீர சாதனையை புலிப் படை வீரர்கள் படைத்துள்ளார்கள் நேற்றுமுன்தினம் மாலை 4·30 மணியளவில் வாழைச்சேனைக்கு அருகாமையிலுள்ள பெண்டுகள்சேனை என்னுமிடத்தில் நடைபெற்ற கடும் சண்டையில் 20க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நூறு பேரைக்கொண்ட இராணுவ அணியொன்று வாழைச்சேனை முகாமிலிருந்து கிளம்பி புலிகளை சுற்றிவளைக்கும் நோக்குடன் பெண்டுகள்சேனையை அண்மித்தபோது புலிப் படைவீரர்கள் திடீர் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

இந்த மோதல் சம்பவம் குறித்துத்தெரியவருவதாவது: மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை காகித ஆலை இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 4 30 மணியளவில் தமிழ்க்கிராமங்களைச் சுற்றிவளைக்கும்நோக்கத்துடன் 100–க்கு மேற்பட்ட இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த போது இவர்களை பெண்டுகள்சேனை என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துக் [5ஆம் பக்கம் பார்க்க]

### குடியிருப்புக்கள் மீது பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகிலிருந்து மக்கள் குடியிருப்பு பகுதிகளையும் கடற்கரைப் பகுதிகளை நோக்கியும் பீரங்கித் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது

நேற்றுக்காலை எட்டுமணியளவில் மாதகல் கடற்பகுதியிலிருந்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து கரையோர மீன்பிடித் தொழிலில்ஈடுபட்டிருந்த மீனவர்கள் விரைந்து கரையை வந்தடைந்தனர். ஆயினும் இத் தாக்குதலினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை

இதேவேளை கீரிமலை தச்சன் காட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் ஷெல் தாக்குதலையும்கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர். (ச)

### பறிக்கப்பட்ட ஆயுதங்கள்

நேற்று முன்தினம் வாழைச்சேனைக்கு அண்மையிலுள்ள பெண்டுகள் சேனையில் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 20 நவீனரக துப்பாக்கிகள் உட்பட பல இராணுவ சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி -1
- ★ ரி-56-2 ரக துப்பாக்கி -08
- ★ ரி-81 ரகதுப்பாக்கி -05
- ★ ரி-56புதியரக துப்பாக்கி-02
- ★ ரி-56-1 ரக துப்பாக்கி -04
- ★ ஏ. கே. மகசின் -64
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி. ரம் மகசின் -1
- ★ நடுத்தர ரவைகள் -2721
- ★ ஏ.கே.எல் எம்.ஜி.லிங்-310
- ★ குண்டு துளைக்காத ஆடை -02
- ★ தொலைத் தொடர்பு சாதனம் -1
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -01
- ★ தொலைத் தொடர்பு சாதன பற்றறி -03
- ★ ஏ. கே. கோல்சர் -6
- ★ தண்ணீர் கான் -03
- ★ கிற்பாக் -19
- ★ தலைக்கவசம் -02
- ★ சப்பாத்து 05 சோடி
- ★ தொப்பி -02

### கைதான மீனவர்கள் விரைவில் விடுதலை?

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மீனவர்களை விடுவிப்பதற்கு உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் குற்றம் இழைக்காதவர்கள் எனக்கருதப்படும் இடத்து அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி முப்படைகளின் தலைமை அலுவலகம் பலாலி இராணுவ உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் இவ்விடயம் தொடர்பாக இராணுவ உயர் (5ஆம் பக்கம் பார்க்க)

### ஆலைத் தொழிலாளி விபத்தில் மரணம்

(இரத்தினபுரி)

தேயிலை ஆலையில் தேயிலை அரைக்கும் இயந்திரத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண் தொழிலாளி ஒருவரின் கூந்தல் இயந்திரத்தில் சிக்கியதால் தலை மோதுண்டு மண்டை பிளந்த நிலையில் மரணத்தை தழுவிக் கொண்டார்.

### வீரச்சாவு

#### கப்டன் தாசன், மயிலினி

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனைக்கு அருகிலுள்ள பெண்டுகள் சேனை எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும் [6ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனுடன் பேசுவது உள்நாட்டு விவகாரம்

(கொழும்பு)

நாட்டில் ஏலவே பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ள இரத்தம் சிந்தும் போரைத் தடுக்கும் முகமாக விடுதலைப் புலிகளுடன் நிகழக்கூடிய பேச்சுவார்த்தை ஒரு உள்நாட்டு விவகாரம். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதா என்ற முடிவு சிறிலங்காவில் தான் எடுக்கப்பட வேண்டும். அந்தமுடிவை சிறிலங்காவிற்கு வெளியில் எடுக்க முடியாது என்று டெய்லி நியூஸ் நாளிதழ் ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது. விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை நடத்துவது என்பது இந்திய நட்புறவுக்கு விரோதமானது என்று இந்து பத்திரிகை எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கத்தைச் சாடியே கடந்த வியாழனன்று டெய்லி நியூஸ் இவ்வாறு தலையங்கம் தீட்டியுள்ளது.

நாம் இந்தியாவுடன் பகையாக விருக்கவிரும்பியதில்லை. இந்தியா புலிகளுக்கு பொருள் (6ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன் துறைமுகம் மார். 5 இல் திறக்கப்படலாம்

காங்கேசன் துறை துறைமுகம் ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்பட இருக்கிறது. இதற்காக இத்துறைமுகம் எதிர் வரும் ஐந்தாம் திகதி திறக்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரசாங்க அதிபரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் மேற்கொண்டிருக்கின்றனர்.

இத் துறைமுகத்தில் இருக்கும் களஞ்சியங்களில் இரண்டு ஏற்கனவே திருத்தப்பட்டுவிட்டன. ஏனைய திருத்தவேலைகள் நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே சுமார் 2500 மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

துறைமுகத்தில் வேலைசெய்வதற்கு தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

முதற் கட்டமாக 6 லொறிகள் மூலம் இப்பொருள்கள் எடுத்து வரப்பட இருக்கிறது.

## வவுனியாவில் உக்கிர மோதல்

# 2 கவச வாகனங்கள் சேதம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விமானப்படை விமானங்கள் அகோர குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டிருக்க கனரக வாகனங்களின் உதவியுடன் முன்னேறிய ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உக்கிர மோதல் நடைபெற்றது. இதன்போது விடுதலைப் புலிகளின் வாகனப் பொறி வெடியில் சிக்கிய இரண்டு கனரக வாகனங்கள் சிதறின.

நேற்று நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் ஈச்சங்குளம். கட்டயன் குளம் பகுதி வரை முன்னேறிய இராணுவத்தினரை கட்டயன் குளம் பகுதியில் இடைமறித்த விடுதலைப் புலிகள் அவர்கள் மீது உக்கிர தாக்குதலைத்தொடுத்தனர். சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இம் மோதலின் போது ஏற்பட்ட மேலதிக சேதவிபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. முன்னேறிய இராணுவத்தினருக்கு

[5ஆம் பக்கம் பார்க்க]

## அறிவித்தல்

எமது ஸ்தாபனம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதென்பதை வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குணம் வீடியோ சென்ரர்**
**42, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-3971)

## தமிழீழ காவல் துறை
## பதவி வெற்றிடங்கள்

01. அ) உப பரிசோதகர் (SUB -INSPECTORS)

தகைமைகள்:- க.பொ.த(சா/த) 6பாடங்களில் சித்தி. 5 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க.பொ. த. (உ/த)

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25 வரை

ஆ) காவலர் (பொலிஸ்) பதவி

தகைமை :- க.பொ.த(சா/த) ஆகக்குறைந்தது 8 -ம் வகுப்பு.

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25 வரை

02. அ) சிறைக்காவல் மேற்பார்வையாளர்கள் –உப பரிசோதகர் தரம்

தகைமை :- க. பொ. த (சா/த) 6 பாடங்களில் சித்தி. 5 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25

ஆ) சிறைக்காவலர்

தகைமை :- 8-ம் வகுப்பு சித்தி.

உயரம் :- 5' 6''

வயது :- 18 — 25

3. தையல்காரர்

சீருடை தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேற்கூறிய பதவிகளுக்கு ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 1992-03-02 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் செயலகத்திற்கு சமுகம் தரவும்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை.

(சி/3973)

## 4-ம்வருடகண்ணீர் அஞ்சலி
### வைரமுத்து சிவராசா (பிள்ளை)

மலர்வு 01 . 10. 1968 — உதிர்வு 29. 02. 1988

திருமலையின் பிறப்பிடமாம்
தியாகத்தின் ஒளிப்பிளம்பே
ஆலங்கேணியிலே அழகாக வளர்ந்தவனே.
சிவராசா என்பது உன் குணத்திற்கே
பிள்ளை என்பது உன் செயலிற்கே
பள்ளிப் படிப்பினை மறந்தாய் - நீ
புலிப்படைக்கே ஓர் ஆதரவாளனாய்
இறவடிச் சேனையிலே புலிப்படையுடன்
சென்றவேளையிலே
காலன் அங்கே உன்னைத் தேடும் வேளையிலே
அமைதி என்று வந்ததுவே -இந்திய அமைதிப்படை-
உன்னை
அவலமுறச் செய்ததுவே அந்த அழுங்குப்படை
சின்ன வயதினிலே நீ செய்த சூரத்தனம்
இனிய நல்லறிவும் கொண்டாய்
தமிழகம் மீட்கும் போரில்
தன்மானம் காக்க சென்றாய்
தன்னினம் மீட்கும் முன்பே
மண்ணில் மறைந்து சென்றாய்.

குடும்பத்தினரும், உறவினரும்

(சி- 3977)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியன் தயாரிப்பான இரும்புப்பெட்டி (Iron Safe) உயரம்2,1/2, அகலம் 1'--10'' ஐந்து பூட்டுகளைக் கொண்டது. சீராக இயங்கக்கூடியது. வர்த்தக நிறுவனங்கள் வீட்டு உபயோகங்களுக்கு உகந்தது. விபரங்களுக்கு ஈழநாதம் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும் (2241)

### இசை வகுப்புகள்

நீங்களும் இசை வல்லுனர் ஆகவேண்டுமா? சப்தஸ்வரம் இசைக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும். இங்கே ஒகன்-கிற்றார் - ட்றம்ஸ் மிருதங்கம் வயலின் – ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர் சப்தஸ்வரம், இசைக்கல்லூரி அரியாலை-பார்வதி வித்தியா சாலை முன்பாக அரியாலை-யாழ்ப்பாணம்.

(சி 3978)

### வைத்திய சேவை

தலைமயிர் வளர, முகப்பரு வெண்குஸ்டம், வாதம், ஆஸ்த்மா, மற்றும் சகலதோல் வியாதிகளுக்கும் மெய்ஞ்ஞான ஆலோசனைப்படி நுண்ணியியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்காலை 9.00-12 00மணி வரை. வேளாங்கண்ணி வைத்திய சாலை டாக்டர் எம். கருணாகரன் 614மானிப்பாய்வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.

(2240)

### ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று சனிக்கிழமை மேடையேறவிருந்த ''சத்தியவான் சாவித்திரி'' இசை நாடகத்தின் காலைக் காட்சி பி. ப. 1.30மணிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை யாழ். பல்கலைக் கழக தமிழ் மன்றம் அறிவித்துள்ளது.

மாலைக்காட்சி திட்டமிட்டபடி பிற்பகல் 4. 00 மணிக்கு மேடையேற்றப்படும் என்றும் மன்றம் தெரிவித்துள்ளது.

### வாராந்த கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம் பெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்குக் கோண்டாவிலிலுள்ளகலைபண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வார அமர்வில் கல்வயல் வே. குமாரசாமி அவர்கள் ''எனது இலக்கிய வெளிப்பாடுகளும் அனுபவங்களும்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

### கிரிக்கெட்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கிரிக்கெட் அணிக்கும், மக்கள் வங்கி கிரிக்கெட் அணிக்கும் சிநேகித பூர்வமான போட்டி ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.

### அகதிகளுக்கான ஐ.நா.அதிகாரி கொழும்பு வருகின்றார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு அகதிகள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இலங்கைக்கு வர இருப்பதாக புனர்வாழ்வுகள் அமைச்சின் செயலாளர் கிடிஸ்டிசில் வா கூறினார். அரசாங்கத்தின் விசேடஅழைப்பின் பேரில் அந்த அதிகாரி இங்கு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 - 11 - 1957 — மறைவு 30 - 01 - 1992

### திருமதி தவச்செல்வம் பிரேமாவதி

சிந்துமொரு புன்னகையாலெம்
இல்லமதிலே ஒளிபரவும்
எந்தையர்தம் மனங்குளிருமுடன்
கவலையாவும் பொடியாகும்
சிந்தைதனில் நிறைந்த நின்சேய்களொடு
கண்ணிறைந்தான் தனைக்காண ஏகி
முந்தி நீ முடிவிலான் தாழடைந்த சேதி
முப்புரத்துத்தீயாய் மூண்டதென் செய்வோம்

நின்பிரிவால் துயருறும் தந்தை: சி.செல்வம்
தாய்: செல்லம்மா

உடன் பிறந்தோர்:- செ.தங்கராசா செ.பவளராணி செ.இரஞ்சிதமலர், செ.வைவேந்திரமாலா, செ. திசராசயோகம், செ. சௌந்தரராசா

பிள்ளைகள்:- கிருஷ்ணகுமார்(ஜேர்மன்) வனிதா(ஜேர்மன்) சயந்தகுமார் (ஜேர்மன்) இராஜிகுமார் (ஜேர்மன்)

மந்துவில்,
கொடிகாமம்

(சி3968)

## புதிய மாணவர்களை அனுமதித்தல்

### கல்வியாண்டு 1992 / 93

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் பாடநெறிகளான

★ கலைமுதற் தேர்வு G: A. Q.
★ விஞ்ஞான முதற் தேர்வு G. S. Q. (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும்நேரில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 02 - 03 - 92
பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொண்ட மாணவர்களுக்கான பின்வரும் பாடங்களுக்கான விரிவுரைகள்

★ அளவையியலும் விஞ்ஞான முறையும்
★ சமூக உளவியல்
★ நாடகமும் அரங்கியலும்
★ முகாமைத்துவம்
★ கணிதம்
★ இலங்கைக் கல்வி
★ சர்வதேச அரசியல்

01 . 03 . 92 இல் ஆரம்பமாகின்றன

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-3964)

## நினைவு கூருகின்றோம்

### 1992-02-29

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் இறவடி - ஆலங்கேணியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

பிள்ளை [வைரமுத்து சிவராசா - பன்குளம், திருக்கோணமலை]

அவர்களை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3976)

நல்லூர் இளை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# "இந்தியாவின் கெடுபிடி நடவடிக்கைகள் தமிழீழப் போரைப் பாதித்துவிடாது"

## --நெடுமாறன்

கேள்வி:

நீங்கள் ஐரோப்பாவிற்கு வந்திருக்கும் நோக்கம் என்ன?

பதில்:

மாவீரர் தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதுடன், ஐரோப்பாவிலுள்ள தமிழ் அகதிகள் நிலைபற்றித் தெரிந்து கொள்வதோடு, ஐரோப்பிய அமைப்புகளிடம் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவு தேடுவதும் எனது விஜயத்தின் நோக்கமாகும்.

கேள்வி:

தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்த ஈழ அகதிகளை இந்திய அரசு திருப்பி அனுப்ப எடுத்த முடிவு குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்:

இன்றைய சூழ்நிலையில் ஈழத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது மனிதாபிமான மற்ற செயலாகும் ஒரு சமாதானத் தீர்வுக்கு முன் அவர்களை அங்கு அனுப்புவது அவர்களைக் கொலைக் களத்திற்கு அனுப்புவது போலாகும்.

கேள்வி:

இந்திய அரசின் சமாதானத்திற்கொவ்வாத இந்தச்செயலானது தமிழ் விடுதலைப் போராட்டத்தில் பின்னடைவை உண்டு பண்ணும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்:

படைகளை அனுப்பி ஈழ விடுதலை போராட்டத்தை அடக்கலாம் என்று ராஜீவ் காந்தி அரசு அனுப்பிவைத்த படை படுதோல்வியைத் தழுவிக் கொண்டது. இப்போதைய இந்திய அரசின் கொடிய நடவடிக்கைகள் ஈழப்போராட்டத்தைப் பெரியளவில் பாதிக்காது

கேள்வி:

நீங்கள் தமிழ் ஈழத்துக்கு 1985, 1987, 1990 - இல் விஜயம் செய்தீர்கள் முதல் பயணத்திற்கும், கடைசி இரண்டு பயணங்களுக்குமிடையில் தமிழ் மக்களின் போக்கில் ஏதாவது மாற்றத்தை உங்களால் கவனிக்க முடிந்ததா?

> தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும், தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் இணைச் செயலாளருமானபி.நெடுமாறன் தனது ஐரோப்பிய விஜயத்தின் போது தமிழ்நேசனுக்குவழங்கிய பேட்டியின் தமிழாக்கம்.
> நன்றி: தமிழ்நேசன்

பதில்:

எனது முதல் இரண்டு விஜயங்களின போது நான் பெற்ற அனுபவத்தை விட 1990 இல நான் பெற்ற அனுபவம் வித்தியாசமானது. 1985 மற்றும 1987 இல் புலிகள ஒரு நேரடிச் சமரில் சிறிலங்கா இராணுவத்தை வெல்லுவார்களா என்ற சந்தேகம் நிலவியது. இந்திய இராணுவத்தை எதிர்த்து வெற்றிகரமாகப் போராடிய புலிகள் சிறிலங்கா இராணுவத்தைத் தோற்கடிப்பார்கள் என்று 1990 இல் மக்கள் உணர்ந்துள்ளார்கள். விடுதலைப்புலிகள் தான் உண்மையான விடுலை இயக்கம் என்றும் மற்றவர்கள் வெறும் மோசடிக்குழுக்கள் என்பதை மக்கள் உணர்ந்துள்ளார்கள். முன்பெல்லாம் நகரங்களிலிருந்து தான் இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார்கள். இப்போது கிராமப்புற இளைஞர்களும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகிறார்கள்.

கேள்வி-

நீங்கள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் சளைக்காத நடு ஆதரவாளர். புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் சமூகத்துக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.

பதில்-

பல நாடுகளில் வாழும் தமிழர்களின் போராட்டத்தின் ஒரு பகுதி ஈழவிடுதலை போராட்டமாகும். இதை உணர்ந்து அவர்கள் அனைத்து வழிகளிலும் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும்.

---

### தமிழ்நேசன் ஆசிரியர்

# சிவநாயகம் மீதான தண்டனை; மனிதஉரிமைமீறல்செயலாகும்

## தி. க. செயலாளர் வீரமணி கண்டனம்

(சென்னை)

தமிழ் நேசன் ஆசிரியர் சிவநாயகம் வயதான ஒரு நீரிழிவு நோயாளி அத்துடன் அவருக்கு மனைவியும் இரு பிள்ளைகளும் உள்ளார்கள். இந் நிலையில் வயோதிபரான சிவநாயகம் எப்படியாவது தப்பி ஓடுவார் என்று அதிகாரிகள் அஞ்சுகின்றார்களா? மனிதாபிமானமற்ற முறையிலும், கீழ்த்தரமாகவும் சிவநாயகம் நடத்தப்படுவதற்கு என்ன விளக்கம் தரமுடியும்? —இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சென்னையில் கருத்தரங்கொன்றில் பேசும் போது கேட்டார்.

பல மாதங்களாக சிவநாயகம் எவ்வித விசாரணையுமின்றி வேலூர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இரண்டு வாரத்துக்கு ஒரு முறை இவர் சைதாப் பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகிறார்.

இப்படியான செயல்களை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இப்படியான செயல்கள் ஒட்டு மொத்தமான மனித உரிமைகள் மீறல் சம்பவங்களாகும். அதிகாரத்தில் உள்ளவர்கள் விரும்பினால் எம்மையும் கைது செய்து சிறைவைக்கட்டும். நாமும் சிறை செல்லத் தயாராகவுள்ளோம். விபத்து அல்லது நோய்வாய்ப்பட்டு இறப்பதைவிட தூக்குக் கயிற்றை சந்தோஷமாகச் சந்திக்கவுள்ளோம். இப்படிச் சாவதை நம் கௌரவமாகவே கருதுகிறோம்—

ஈழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்வதைக் கண்டிக்கும் முகமாக பெரியார் ஞாபக தினத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும் போது வீரமணி இவ்வாறு தெரிவித்தார்.

இதே வேளை, சிவநாயகத்தை விடுதலை செய்வதற்கான வழக்குச் செலவுகளுக்கு சிவநாயகம் விடுவிப்பு நிதியத்தை இங்கிலாந்தில் தமிழர் போறம் (லிமிடெட்) ஆரம்பித்துள்ளது. நிதி உதவ விரும்புகிறவர்கள் டாகடர் ரஞ்சன் நமசிவாயம், த.பெ.எண்: 373 குறைடன், சுறே சி ஆர் (6ஏபி) இங்கிலாந்து என்ற முகவரிக்கு அனுப்புமபடி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

சிவநாயகம் ஜூலை 18, 1991 இல் சென்னையில் கைது செய்யப் பட்டார்.

# தாய்லாந்து படகு மீது இந்திய கடற்படை சூடு

(சென்னை)

இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த தாய்லாந்து மீன்பிடிப் படகுகள் இரண்டின் மீது இந்திய கரையோர காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் இதனால் ஒரு தாய்லாந்து நாட்டு மாலுமி பலியானார் என இந்திய கரையோர பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்

ஒரு படகும் அதிலிருந்த மாலுமிகள் 23 பேரும் கைது செய்யப்பட்டதாகவும் மற்றொரு படகு தப்பியோடி விட்டது எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

கல்கத்தாவுக்கு தெற்கே இந்த இரண்டு படகுகளும் மீன் பிடித்துக் கொண்டிருந்ததாக அவர் கூறினார்.

# பயணிகள் ஆர்ப்பாட்டம்; போக்குவரத்து பாதிப்பு

சென்னையில் புறநகர் ரயில் கட்டண உயர்வை ஆட்சேபித்துப் பயணிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் மின்சார ரயில் போக்குவரத்து சுமார் நான்கு மணிநேரம் பாதிக்கப்பட்டது.

சென்னைக் கடற்கரை புகையிரத நிலையத்துக்கும் தாம்பரத்துக்குமிடையில் ஓடிக்கொண்டிருந்த ரயில்கள் காலை ஒன்பது மணியளவில் அந்தந்த இடங்களில் நிறுத்தப்பட்டன. தொலை தூர ரயில் சேவைகளும் பாதிக்கப் பட்டன.

கல்வீச்சில் ரயில் சாரதி ஒருவர் காயமடைந்தார். மீனம்பாக்க புகையிரத அதிகாரி அலுவலகத்தில் புகுந்த சிலர் அங்கிருந்த பொருள்களைச் சேதப்படுத்தினார்கள் மீனம்பாக்க நிலையத்தில் நின்ற ஒரு ரயில் பெட்டி தீ வைத்துக் கொழுத்தப்பட்டது.

புகையிரத நிலையம் அருகில் ஓடிக்கொண்டிருந்த பஸ்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன. நான்கு பஸ்கள் சேதமடைந்தன.

தகவலறிந்த உயர் அதிகாரிகளும் பொலிசாரும் பயணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

# அசர்பை. - ஆர்மேனியா 3 நாள்போர் நிறுத்தம்

(மொஸ்கோ)

அசர்பைஜான்மற்றும்ஆர்மேனியாக்குடியரசுகளுக்கிடையே கடந்த சில நாட்களாக நடைபெற்ற தீவிர சண்டைக்குப் பின்னர் நேற்று முன்தினம் காலை முதல் மூன்று நாள் போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

அசர்பைஜான் குடியரசுக்கும், ஆர்மேனியாக் குடியரசுக்கும் இடையேயான நகார் கானுபாத் பகுதியின் உரிமை தொடர்பாக நிலவும் பூசலையடுத்துமூண்ட சண்டையைச்சமாதான வழிகளில் தீர்க்கஈரான் அரசுஎடுத்திருக்கும் முயற்சியினாலேயே இப்போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது

ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலயாத்தி சண்டை நடைபெற்ற நகார்கானுபாத்பகுதிக்கு விஜயம் செய்வதற்கு வசதியாகவே இப் போர்நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாக, அசர்பை ஜான் அதிபரின் பிரதிநிதியொருவர் கூறியுள்ளார்.

---

### 301சட்டத்தின் கீழ்

# இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா செயல்படாது

அமெரிக்க வாணிபச் சட்டத்தின் 301 வது சிறப்பு விதியின கீழ் இந்தியாவிற்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை என்று அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியான திருமதி கார்லா கின்ஸ் வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகத்தால் அமெரிக்காவின் இந்த முடிவு குறித்துத் தெரிவித்தார்.

ஆனால் இது குறித்த பேச்சுக்களின் முன்னேற்றத்தை அமெரிக்கா தொடர்ந்து கண்காணிக்கும் என்றும்,

வர்த்தகக் காப்புவரி பற்றிய பொது ஒப்பந்த தாபனத்தின் (GATT) உருகுவே சுற்றுப் பேச்சுக்களின் நடவடிக்கைகளையும் அமெரிக்கா கவனித்து வருகின்றது என்றும்,

நிலைமையைச் சரிசெய்வதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி புஷ் நிர்வாகம் முழு அளவில் மன நிறைவு அடையவில்லை என்றும் வாஷிங்டனில் அமெரிக்க அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ஜம்மு-காஷ்மீரில் ஏற்பட்ட

# அண்மைய சம்பவங்களால் இயல்பு நிலைமை பாதிப்பு

(டில்லி)

ஜம்மு - காஷ்மீர் பிரதேசத்தில் அண்மையில் நடந்த சம்பவங்கள் அப்பிரதேசத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்த தடையாக உள்ளன என்று உள்துறை அமைச்சர் எஸ்.பி, சவான் கூறியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் பிரதேசத்தில் மேலும் ஆறு மாதங்களுக்கு குடியரசுத் தலைவர் ஆட்சியை நீடிக்கக் கோரும் சட்டபூர்வ தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

### கம்யூனிசத்தின் எதிர்காலம்

# நியூயோர்க் டைம்ஸில் கொர்பசேவ் எழுதுவார்

முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தமதுபத்திரிகையில் மாதம் ஒருமுறை எழுத இருக்கிறார் என 'நியூ யோர்கடைம்ஸ்' அறிவித்துள்ளது.

கம்யூனிசத்தின் எதிர்காலம் வளைகுடா யுத்தம், இரம்ளினுக்கும்பாப்பரசருக்கும்இடையேயான உறவு, தனக்கும் யெல்ஸினுக்கும்இடையேயான உறவு போன்ற அம்சங்கள் பற்றி கொர்பசேவ் எழுதுவார் என்றும்

இவரது சில விஷயங்கள்ஆசிரியத் தலையங்கப் பக்கத்தில் வெளியாகும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

### அல்ஜீரிய, லிபியாவில்

# முன்னாள் சோவியத்தின் அணு.விஞ்ஞானநிபுணர்கள்

(வாஷிங்டன்)

முன்னாள் சோவியத் யூனியன் விஞ்ஞானிகள் அல்ஜீரியாவிலும், லிபியாவிலும் அணு சக்தி திட்டங்களில் வேலை செய்து வருவதை அமெரிக்க உளவுப்பிரிவுகண்டுபிடித்திருப்பதாக வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை கூறியுள்ளது.

இந்த விஞ்ஞானிகள் ஒரு கொள்கை, அல்லது கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல என்றும், ரஷ்ய அரசாங்கத்துடன் அவர்களுக்குத் தொடர்பு இல்லை என்றும் இனங்காட்ட விரும்பாத அதிகார வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அது கூறியுள்ளது

லிபியாவிலும், அல்ஜீரியாவிலும் தலா ஆறு அல்லது ஏழு முன்னாள் சோவியத் விஞ்ஞானிகள் இருப்பதாக ஒரு அதிகாரி தெரிவித்தார் என்றும்-

அமெரிக்கா, ஜேர்மனி. ரஷ்யா ஆகிய நாடுகள் முன்னாள் சோவியத் அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு வேலை அளிக்கும் பொருட்டு விஞ்ஞான தொழில் நுட்ப நிறுவனத்தை அமைக்கும் திட்டத்தை வெளியிட்டன என்றும், வாஷிங்டன் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

# அத்தியாவசிய சேவைகளை ஆரம்பிக்க உதவி வழங்கும் நாடுகள் வற்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்குபகுதிகளில் சீர்குலைந்திருக்கும் அத்தியாவசிய சேவைகளை மீண்டும் சீர்செய்யும் படியும், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சேவைகளை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கும்படியும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் சிறிலங்கா அரசை வற்புறுத்தியிருக்கின்றன.

மேற்படி பகுதிகளில் நீண்டகாலமாக சீர்குலைந்திருக்கும் அத்தியாவசிய சேவைகளான உணவு விநியோகம், மின்விநியோகம், மருத்துவசேவை, மற்றும்போக்குவரத்துசேவை, போன்றவற்றை மீண்டும்ஆரம்பிக்கும்படி வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

உதவிவழங்கும் நாடுகளினது பிரதிநிதிகளும் மற்றும் உலக வங்கி ஆசிய அபிவிருத்திவங்கி ஆகியவற்றினது பிரதிநிதிகளும் அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன், நிதி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் ஆகியோரைச் சந்தித்து இவ்விடயம் தொடர்பாக நீண்ட நேரம் உரையாடியுள்ளனர் இவ் உரையாடலின் போது மேற்படி அத்தியாவசிய சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

அதேவேளை இவ்வாறான அத்தியாவசிய சேவைகளை மீண்டும் சீர்செய்வதற்கு தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக சிறிலங்கா அரசின் சார்பில் திரு. பிரட்மன்வீரக்கோன் உறுதி அளித்ததாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. [க]

## மாணவர் உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவ உணவு முத்திரையின் நிதிப் பெறுமதி விபரத்தினை பல பாடசாலை அதிபர்கள் இதுவரை வழங்கவில்லையென கச்சேரி சமூக சேவைப்பகுதி தெரிவித்துள்ளது. செப்ரெம்பர், ஒக்டோபர் நவம்பர் டிசம்பர், ஜனவரி மாதங்களுக்கான நிதிப் பெறுமதி விபரங்களே இதுவரை வழங்கப்படவில்லை.

இதுவரை பெறுமதி விபரங்களை அனுப்பாத அதிபர்கள் தத்தம் உதவி அரசாங்க அதிபர்களுக்கு இவ்விபரத்தினை எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதிக்கு முன்னதாக கொத்தணி அதிபரூடாக வழங்குவதுடன் பிரதிகளைஅவ்வக் கோட்டத்திற்கு தவறாது அனுப்பும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## 30,000 தமிழ் அகதிகள் 3 மாதத்.வந்து சேருவர்

(கொழும்பு)

இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்திருக்கும் தமிழகத்திலுள்ள 30,000 இலங்கைத் தமிழர்கள் அடுத்த மூன்று மாதங்களில் வந்து சேர்ந்திடுவர் என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத்தெரிவித்த அவர் இந்த விபரங்களை இந்தியா தமக்குத்தந்துள்ளதாக தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 22 ஆம் திகதி முதல் மொத்தம் 4569 பேர் ஏழு குழுக்களாக திருக்கோணமலையிலும், மன்னாரிலும் வந்திறங்கியதாகவும்'

மார்ச் 1 ஆம் 2ஆம் திகதிகளில் மேலும இரு குழுவினர் மன்னாருக்கு வருவார்கள் என்றும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வரும் மற்றொரு குழுவினர் திருக்கோணமலைக்கும் வருவார்கள் என்றும் பெரும்பாலான குடும்பங்கள் மீண்டும் குடியமர்த்தப்படுவதற்காக தத்தமது மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மலையகத்தில் கடும்வரட்சி நோய் பரவும் அபாயம்

(இரத்தினபுரி)

மலையகத்தில் கடும் வரட்சி நிலவுகின்றதால், நீர் ஊற்றுக்கள் ஆறுகள் என்பன வற்றிய நிலையில் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக நிலவும் இவ் வரட்சியினால் குடி நீருக்குத் தட்டுப்பாடு, நோய் பரவும் அபாயம், தேயிலைச் செய்கையில் பாதிப்பு என்பன ஏற்பட்டுள்ளதாகவும்,

மகாவலி கங்கையில் நீருக்குப் பதிலாக மண்திட்டுக்களையும், கற்பாறைகளையுமே காண முடிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## மகளிர் தினத்தைமுன்னிட்டு கட்டுரைப் போட்டிகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் விவகாரக்குழுவினதுசர்வதேச மகளிர் தின விழாவினை எதிர்வரும் 8ஆம் திகதி (8-3-92) ஞாயிற்றுக்கிழமைகாலை சமாசத்தலைவர் திரு. எஸ். முருகநேசன் தலைமையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்த மகளிர் தின விழாவை யொட்டி மகளிர் அங்கத்தினர்களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகளும் கூட்டுறவு மகளிரினால் செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின பொருட்காட்சி ஒன்றையும் நடாத்த உள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இடையே கட்டுரைப போட்டியும் இடம் பெறும்.

மேற்படி விழாவைச் சிறப்பாக நடாத்தச் சகல சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும், மகளிர் அமைப்புக்களும், பிராந்திய சபையினர்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு சமாச மாவட்டச் செயலாளர் திரு ஏ. எம். ராஸ்குமார் தெரிவித்துள்ளார். (24)

## வெளிநாட்டில் பட்டம்பெற்ற புதிய டாக்டர்கள் நியமனம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பட்டம் பெற்ற ஐம்பத்தியொரு டாக்டர்கள் விரைவில் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

வெளிநாடுகளில் வைத்தியப் பட்டம்பெற்றஐம்பத்தியொரு இலங்கையர்கள பயிற்சி வைத்திய அதிகாரிகளாக நியமனம் செய்யப்படவுள்ளனர். நாட்டிலுள்ள பல்வேறு வைத்தியக் கல்லூரிகளிலும் வடகொழும்பு மருத்துவ கல்லூரியிலும் இருந்து வெளியேறிய டாக்டர்களுடன் இவர்களுக்கும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

## கடும் வரட்சி

(கொழும்பு)

கடந்த ஜனவரியில் இருந்து நாடு முழுவதிலும் நிலவி வரும் கடும் வரட்சி மே மாதம் வரை நீடிக்கும் என்று வானிலை அவதான நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடத்திற்கு ஒரு முறை மழை மிகக் குறைவாகவே பெய்யும் என்றும் இந்த வகையில் இந்த வருடம் மழை மிகக் குறைவாக பெய்யுமென்றும், முன்பு 1983ஆம் 1987ஆம் ஆண்டுகள் கடும் வரட்சி நிலவியதென்றும் அவர் தெரிவித்தார்.

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு விளம்பர வருமானம் இருபத்தைந்து வீதம் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை வானொலியின் விளம்பரம் மூலமான வருமானம் இருபத்தைந்து சதவீதம் வீழ்ச்சியடைந்திருப்பதாகத் தெரிய வருகின்றது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் விளம்பரங்கள் தடைப்பட்டுப் போனமையே இந்த விளம்பர வருமான வீழ்ச்சிக்கு காரணம் என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்படும்

- வீரசிங்கமல்லிமராச்சி

(கொழும்பு)

வட பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்கமல்லிமராச்சி கூறியுள்ளார். இப்பகுதியில் செயற்படாதிருக்கும் கூட்டுறவு இயக்கங்களைப் புதுப்பிக்கவும், கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்கவும் உணவுக் கூட்டுறவு அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும், நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்தினைப் புனரமைக்கவும், பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சீருடைவழங்கவும் கடன்வழங்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

## சித்தி பெற்றார்

(யாழ்ப்பாணம்)

அதி சிறப்பு எழுதுவினைஞர் சேவைக்கான பரீட்சை முடிவுகள் வெளி வந்துள்ளன. இம்முறை யாழ். செயலகத்தைச் சேர்ந்த திருமதி ரட்ணராஜா ராஜேஸ்வரி சித்தியடைந்துள்ளார். இவர் தற்பொழுது புனர்வாழ்வுப் பகுதி கணக்குக் கிளையில் கடமையைப் பொறுப்பேற்றிருக்கிறார். (க)

## ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டிகள்

யாழ். மாவட்டத்திலுள்ள ஆறுகோட்டக் கல்விப்பிரிவுகளிலும் ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டிகள் எதிர்வரும் 2 ஆம் திகதி (2. 3. 92) யாழ். கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள சித்திரப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண கோட்டம் யாழ். இந்துக் கல்லூரியிலும் வடமராட்சி கோட்டம் -புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி கோட்டம் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்திலும், வேலணைக் கோட்டம் - யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், மருதனார்மடக் கோட்டம் - இராமநாதன் கல்லூரியிலும், பண்டத்தரிப்பு கோட்டம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் இவ் ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டிகள் நடைபெறுகின்றன. (25)

## போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இலங்கையர் அறுவருக்கு பாரிசில் சிறை

ஆறு இலங்கையர்களுக்கு பிரான்சு நீதிமன்றத்தில் சிறை விதிக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டதன் பேரில் அரசியல் தஞ்சம் கோரிய சிலர் உட்பட ஆறு இலங்கையர்கள் சிறை விதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வருடம் முதல் ஐந்து வருடம் வரையிலான தண்டனைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

## ரூபவாகினியில் ஒளிபரப்படும்தமிழ் நிகழ்ச்சிகள் இடைநிறுத்தம் தொண்டா கண்டனம்

(கொழும்பு)

ரூபவாஹினியில், ஒளிபரப்பப் பட்டு வந்த சில தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளது தொடர்பாக அமைச்சர் தொண்டமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவருக்கு தொண்டமான் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்ஏதாவது காரணத்திற்காக ரத்துச் செய்யவேண்டி ஏற்பட்டால் அதற்குப் பதிலாக மாற்று வழி முறைகள் செய்யப்படவேண்டும் என்றும் முன்னறிவித்தல் இன்றி தமிழ் நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்படுவது இனங்களுக்கிடையான சௌஜன்யதிற்கு பெரும் குந்தகமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நிர்வாகிகள் தெரிவு

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த23ஆம் திகதி நடைபெற்ற போது 1992 ஆம் ஆண்டிற்கான புது நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சி.அருமைத்துரை, செயலாளராக மு.சற்குணம், பொருளாளராக செ.தியாகராசாவும் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக நான்கு பேரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## பல்கலைக் கழக அனுமதி புள்ளிகள் மட்டம் பற்றி விரைவில் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

பல்கலைக் கழக அனுமதிக்கான புள்ளிகள் மட்டம பற்றி இன்னும் ஆறு வாரங்களில் முடிவு செய்யப்படும் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

1990, 1991 ஆம் ஆண்டிற்கான க. பொ. த உயர்தரப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளி பெற்றவர்கள் இந்த ஆண்டு ஒக்டோபரில் பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்றும்,

வடக்குக் கிழக்கைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் மேற்படி பரீட்சை நடந்தது என்றும் வடக்குக் கிழக்கில் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரலில் இந்த பரீட்சை நடைபெற்றது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உறுதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கவும

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் 1940ஆம் ஆண்டிற்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட காணிகளின் உறுதிப் பிரதிகள் தேவையானோர் முறைப்படி விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ். வீடமைப்புச் செயலகத்தில் 2ஆம் மாடிக்கட்டடத்தில் இயங்கும் காணிக் கந்தோரில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்டக் காணிப் பதிவக உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

(24)

### சிந்தனைக்கு

துவேஷத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் கருத்துக்கள், எப்பொழுதுமே அதிக பலாத்காரத்தில் ஆதரவு தேடும்.

— ஜெஃப்ரி பிரபு

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 29-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2608
த. பெ. எண் 05

# அரசியலில் நட்பு 'இந்து' கவலை

'விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவது இந்திய-சிறிலங்கா நட்பிற்கு விரோதமானது' என 'இந்து' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

'இந்து' பத்திரிகையின் இந்நிலைப்பாடு வெறுமனே ஒரு பத்திரிகையின் நிலைப்பாடு என ஒதுக்கித் தள்ளி விட முடியாதது. இந்துப்பத்திரிகை இந்தியாவில் ஒரு முன்னணிப் பத்திரிகை மட்டுமல்ல. இந்தியாவை ஆளும் பிராமண வர்க்கத்தின் குரலாகவும் ஒலிக்கும் பத்திரிகையாகும். இந்நிலையில், இந்துப் பத்திரிகையில், வெளியிடப்பட்டிருக்கும் இக் கருத்தானது இந்திய ஆளும் வர்க்கத்தின் கருத்தாகவோ அன்றி இந்திய ஆளும் வர்க்கத்தில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் கருத்தாகவோ இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்துப் பத்திரிகையின் பங்கு கடந்த காலத்தில் ஒரு பத்திரிகையின் நிலைக்கு அப்பாலும் சென்றதுண்டு. 1987ஆம் ஆண்டு இந்தியாவும் - சிறிலங்காவும் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையில் இந்துப்பத்திரிகைகளுக்குக் கணிசமான பங்கு இருந்தது. இலங்கைக்கான அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிற்றுடன் இந்துப் பத்திரிகையைச் சேர்ந்த ராமும் இணைந்து உருவாக்கியதே இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கை ஆகும்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது இந்திய சிறிலங்கா நட்புறவிற்கு விரோதமானது என இந்துப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியிருப்பது இந்திய பிராமண ஆளும் வர்க்கம் அல்லது அதை நெறிப்படுத்தும் வர்க்கம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை என்ன நோக்கில் அணுகுகின்றன என்பதை வெளிப்படையாகக் காட்டுவதாக உள்ளது.

தமிழரின் தேசிய இனப் போராட்டம் இந்திய பிராமண ஆதிக்க வர்க்கத்திற்கு எப்பொழுதும் ஓர் அச்சம் ஊட்டும் அம்சமாகவே உள்ளது. தமிழரின் உரிமைகள் விட்டுக் கொடுப்பிற்கோ அன்றிப் பேரத்திற்கோ உரியவை அல்ல என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, இந்திய அதிகார வர்க்கத்திற்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தும் ஓர் விவகாரமாகவே உள்ளது. இந்நிலையில், தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விடவும், அதற்குத் தலைமை தாங்கும் விடுதலைப்புலிகளை ஒழித்து விடுவதுமே இந்தியாவின் நோக்கமாகும்.

அண்மைக் காலத்தில் இந்தியா சென்று திரும்பிய அமைச்சர் தொண்டமான் கொழும்பில் தங்கியுள்ள தமிழ் அரசியல்வாதிகள், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா இப்பொழுது அக்கறையாக இல்லை எனத் தெரிவித்துள்ளனர். ஆனால், உண்மை நிலை அதுவல்ல. இலங்கை விவகாரத்தில் இந்தியா கடந்த காலத்தில் தான்பெற்ற அவமானகரமான தோல்வியை எண்ணி எண்ணி வெதும்பிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு, மறைமுகமாக அரசியலில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தங்களையும் போட்டு வருகின்றது. நேரடி நடவடிக்கைகளுக்கு இன்றைய உலக நிலவரம் சாதகமாக இல்லை.

இந்நிலையில், தற்பொழுது உலகின் பல்வேறு பாகங்களிலும் இருந்து இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு உருவாகியுள்ள வற்புறுத்தல்களினால், சிறிலங்கா அரசாங்கம் குழம்பிப் போயுள்ள நிலையில், புலிகளுடன் பேசுவது குறித்து 'இந்து' எச்சரிக்கை விடுத்துள்ளது. அரசியலில் நட்புப் பற்றி பிரஸ்தாபித்துள்ளது.

ஆனால். அரசியலில் 'நட்பு' என்பது பற்றி 'இந்து'விற்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இஸ்ரேலை கட்டியணைக்க இந்தியா துடித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் 'இந்து'வின் சிறிலங்காவுடனான நட்பு பற்றிப் பேசுவது தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான செயற்பாட்டிற்காக மட்டுமே.

# நிவாரணப் பொருள்கள் பாவனைக்கு உதவாதவை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவநடவடிக்கையினால் அச்சபபட்டு கிராமசேவையாளர் பிரிவுகளுக்கிடையே இடம் பெயர்ந்திருக்கும் தமிழ் குடும்பங்களுக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருள்கள் யாவும் பாவனைக்கு உதவாதவையென சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் வவுனியா அரசாங்க அதிபரினால் இரு லொறிகளில் இப்பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

திரிபோஷா, மல்லி, கோப்பி ஆகிய பொருள்கள் மிகவும் பழுதடைந்து அப்பொருள்களில் புழுக்கள் நெளிவது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கிராமசேவையாளர்களினால் அவை பாவனைக்கு உதவாதவையென சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இன்னமும் சில தினங்களில் அதே லொறிகளில் அப்பொருள்கள் ஏற்றப்பட்டு நகரப் பகுதி கொண்டு செல்லப்படலாம் அல்லது அழித்து வைக்கப்படலாம் என்று கூறப்பட்டது.

வவுனியா கச்சேரியின் இந்த நடவடிக்கையினால் அகதி மக்கள் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளனர். (தி)

## யாழ்-பல்கலைக் கழகத்தில்
# டிப்ளோமா. தெரிவுக்கான நேர்முகம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவிருந்த டிப்ளோமா தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை ஒத்தி வைக்கப் பட்டுள்ளதாக இ.தொ.கா. தலைவர் அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

வடக்கில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில், யாழ் பல்கலைக் கழகத்திற்கு சென்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவோ, பயிற்சி நெறியைஅங்கு தொடரவோ முடியாத நிலையில் இருப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் தன்னிடம் முறையிட்டதாகவும்அதன் பின்னரே இத் திகதி ஒத்தி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பயிற்சி நெறியை தொடர உள்ள இந்திய வம்சா வழியின் ஆசிரிய மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகம் அல்லது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயிற்சி நெறியை தொடர்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் நேர்முகப் பரீட்சைகள்கொழும்பிலேயே நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கழிவு நீர் அகற்றல்;
# யாழ். வைத்தியசாலைக்கு ஒரு லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையின் கழிவு நீர் அகற்றும் தொகுதியைப் புனரமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது

இந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி மேற்படி கழிவகற்றும் தொகுதியைப் புனரமைக்க முடியும் எனக் கூறப்படுகிறது. இப்புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்சப்படும்பட்சத்தில் கழிவுநீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப் பட்டுவிடும் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை கைதடி ஆயுர்வேத போதனா மருத்துவமனைக்கு வேண்டிய தண்ணீர் பம்பிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், ஏனையதேவைகளுக்காகவும் சுமார் இரண்டு லடசம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பு சென்றிருந்த வேளையில் யாழ். அரசாங்க அதிபர் ஆயுர்வேதத் திணைக்களத்துடன் நடாத்தியபேச்சுக்களை அடுத்தே இந்த ஒதுக்கீடுசெய்யப்பட்டிருககிறது.(க)

# விளையாட்டுப் போட்டி

(குருநகர்)

யாழ் - பெரியபுலம் மகா வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று (29-2-92) பிற்பகல் 1-30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு' க.கனகசிங்கம் தலைமையில் நடைபெறும்.

புனர்வாழ்வு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு, ம.செல்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி பிரேமாவதி செல்வின் பரிசில்கள் வழங்குவார். (21)

## புலிகளின்

கடும் தாக்குதலைமேற்கொண்டனர்.

ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த உக்கிரமோதலில்20-க்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் பலியாகினர். ஏனையோர் இறந்தவர்களின் சடலங்களையும் விட்டுவிட்டு முகாமிற்குத்தப்பியோடிவிட்டனர்.

20 இராணுவத்தினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டு எரிக்கப்பட்டன. 20 நவீன ரகத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மோதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சிறிலங்கா அரசுக்குச்சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று இராணுவத்தினருக்கு உதவியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. புலிகளின் எதிர்த்தாக்குதலை அடுத்து இந்த உலங்குவானூர்தி ஓடி மறைந்துவிட்டது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின்போது புலிகளின் தரப்பில் ஒருபோராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

## புகையிரத கடவை ஊழியர்
# ஒருவருடச் சம்பளம் வழங்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த புகையிரதக்கடவை ஊழியர்களுக்கு ஒரு வருடத்திற்கான சம்பளம் வழங்கப் பட இருக்கிறது.

1990 யூலை மாதத்தில் இருந்து 1991 யூலை மாதம் வரையான ஒரு வருடகாலத்திற்குரிய சம்பளத்தை வழங்குவதற்கு றெயில்வேதிணைக்களம் அனுமதி வழங்கி இருக்கிறது. இச்சம்பளக் கொடுப்பனவுகள் அடுத்த வாரம் முதல் யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்பட இருக்கிறது.

இம்மாவட்டத்தில் சுமார் 300 புகையிரதக்கடவை ஊழியர்கள் சேவை புரிந்து வந்துளளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் ஊழியர்களது மிகுதிக் காலத்திற்குரிய சம்பளப்பணம் பின்னர் வழங்கப்பட இருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டு வருகிறார்

## தடுத்து

ஆம் விதிக்கு புறம்பான வகையில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது என சட்டத் துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

1990 ஆம் ஆண்டில் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டமை தொடர்பாக 1415 வழக்குகளும், 1991 ஆம் ஆண்டில் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டமை தொடர்பாக 3225 வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சம்பந்தப்பட்ட எழுபத்திரண்டு பேருக்கும் நட்டஈட்டுத் தொகை பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டதாக சட்ட உதவி நிலையத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

## வவுனியாவில்

உதவியாக வந்த மூன்று பொம்பர்கள், இரண்டுஉலங்கு வானூர்திகள் சீபிளேன் ஆகியன புதுக்குளம், கட்டையன் குளம் பகுதிகளை இலக்காகக் கொண்டு குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் கவிபர் தாக்குதல்களையும் மேற் கொண்டன.

# வாகனங்களை மீளப்பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் இராணுவத்தினரால தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொது மக்களது வாகனங்களை மீண்டும் பொது மக்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களில் பெருப்பாலானவை தென் பகுதியைச் சேர்ந்தவை என்று கூறப்படுகின்ற போதிலும் உரிய அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் வாகனச் சொந்தக்காரரிடம் ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. (க)

## கைதான

அதிகாரிகளுடன் உரையாடியிருக்கிறார். இதன்படி மேற்படி மீனவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்படலாம் எனத்தெரியவருகிறது. (க)

# குடாநாட்டு நிலைமையை மதிப்பிட இரு இராணுவ குழுக்கள் விஜயம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் எடுப்பதற்காக துருப்புக்களை அனுப்புவதற்கு முன்னோடி நடவடிக்கையாக இரண்டு இராணுவ தூதுக்குழுக்கள் அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளன. மூத்த இராணுவ பிரிகேடியர்கள் அடங்கிய இந்த இரண்டு தூதுக் குழுக்களும் குடாநாட்டினதும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டு யுத்தத்திற்கான தயாரிப்பு நிலைமைகளைக் கண்டறிந்துள்ளனர் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு தூதுக்குழுக்களும் தமது அறிக்கைகளைத் தனித்தனியே இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணாவிடம் கையளித்துள்ளன. இந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளையும், வசதியீனங்களையும் இராணுவத் தளபதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவுள்ளார்.

விடுதலைப் புலிகள் இந்தப் போரின்போது புதிய தந்திரோபாயத்தை அல்லது புதிய போர்முறையைக் கையாளலாம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கருதுகின்றன. சில வகையான விமான எதிர்ப்பு ஆயுதங்கள், தொழில்நுட்பம் மிகுந்த கடற்கண்ணிகள் என்பவற்றை விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் சாத்தியப்பாட்டை நிராகரிக்க முடியாது எனவும் அவை குறிப்பிட்டன.

## பணிப்பாளரைவிட ஊழியர் சம்பளம் அதிகம்

### மத்தியவங்கி ஆளுநர் கவலை

(கொழும்பு)

தன்னிலும் பார்க்க தனக்கு கீழ் பணிபுரியும் நூற்றிமூன்று ஊழியர்கள் அதிக சம்பளத்தைப் பெறுவதாக மத்திய வங்கி ஆளுநர் நெவில் கருணாதிலக்க சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் புகார் செய்துள்ளார்.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் அதிக புள்ளி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் முகமாக ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய நெவில் கருணாதிலக்க மேலும் கூறுகையில் நான் மத்திய வங்கி ஆளுநராக இருக்கிறேன். ஆனால் எனது ஊதியம் எனக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளிலும் பார்க்க குறைவாக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் கல்வியறிவு என்பதை வெறுமனே ஏட்டுக்கல்வியாக நிறுத்தி விடக்கூடாது அதனை நாட்டுக்கேற்றவகையில் பயன்படுத்த வேண்டும். அதற்கு இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எனக்கு மரவேலையும் தெரியும். மோட்டார் மெக்கானிசமும் தெரியும் ஏதாவது தேவையேற்பட்டால் அவற்றைச் செய்ய எனக்குத் தெரியும். அதிலிருந்து பின் வாங்க வேண்டிய தேவை எனக்கில்லை எனவும் குறிப்பிட்டார்.

### பிரபாகரனுடன்

உதவியும், மானசீகமான உதவியும் வழங்கியதால்தான் புலிகள் இன்று இந்த நிலையில் உள்ளனர்.

தங்களது போராட்டத்தை விடுதலைப் புலிகள் முன்னெடுத்துச் செல்வதற்காக தமிழ் நாட்டு முதலமைச்சரினால் கோடிக்கணக்கான பணம் புலிகளுக்கு வழங்கப்பட்டது இது கிட்டத்தட்ட நட்புறவான அயல் நாட்டைப் பிரிக்கும் செயலாகும். தமிழ்நாடு, விடுதலைப் புலிகளுக்கு புகலிடமாக அமைந்ததும், எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி தமிழ்நாட்டுக் கரையோரங்களைப் புலிகள் தமது வினியோகத்துக்கான தளமாகப் பாவித்தமையும் புலிகளின் வெற்றிக்கு உதவிய பெரும் காரணங்களாகும்.

பிரபாகரனைச் சட்டத்தின் பிடியில் கொண்டுவருவதற்காக இன்று இந்துப் பத்திரிகை சிறிலங்காவும் இந்தியாவும் பரஸ்பரம் குற்றவாளிகளைக் கையளிக்கும் ஒப்பந்தம்பற்றிப் பேசுவது பெரும் ஆச்சரியத்தைத் தருகிறது. சிறிலங்கா இப்படியான இருதரப்பு உடன்படிக்கையை அப்போது விரும்பியபோது புலிகளின் தலைவர்கள் இந்தியாவில் வீரர்களைப் போல் நடத்தப்பட்டனர். அப்போது இந்தியாவினதும், இந்தியப் பத்திரிகைகளினதும் நிலைப்பாடுவேறாக இருந்தது. இன்று இராகம் மாறியுள்ளது என்றும் டெய்லி நியூஸ் கூறியுள்ளது.

புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து ஏதோ ஒருவகையில் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது நாட்டின் நல்வாழ்விற்கு இன்றியமையாதது. ராஜீவ்காந்தியின் கொலையுடன பிரபாகரனையும், பொட்டம்மானையும் சம்பந்தப்படுத்தியிருக்கும் இந்தியா புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தமக்கு விரோதமானநடவடிக்கை என்று கருதக் கூடாது.

இந்து அணுகுவதுபோல் இந்திய அரசு இந்தப் பிரச்சினைய அணுகக்கூடாது என்பது எமது எதிர்பார்ப்பாகும். பிரபாகரனுடனும், புலிகளுடனும் பேச்சுவார்த்தை இடம் பெறுமா இல்லையா என்பதை நாம் கூறவரவில்லை. எமக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது. எமது நாட்டிற்கு ஏற்றவகையில் உள்நாட்டுப்போர் முடிவுறவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்

மேலும் இரத்தம் சிந்தாமல் புலிகள் கௌரவமானதும், நியாயபூர்வமுமான பேச்சுவார்த்தையை விரும்பினால் நிலைமைகள் மாறலாம் இது நடக்குமானால் புலிகளும் கொழும்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை இந்தியாவென்ன எவரும் நட்புறவுக்கு விரோதமான செயல் என்று கொள்ள முடியாது

இவ்வாறு டெய்லி நியூஸ் அதன் ஆசிரியத் தலையங்கத்தில் மேலும் தெரிவித்துள்ளது

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கணபதி சின்னப்பிள்ளை

காலஞ்சென்ற திருமதி கணபதி சின்னப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/ நடேஸ்வரக் கல்லூரி, ஆசிரியர், மாணவர்,
காங்கேசன்துறை. அலுவலக உத்தியோகத்தர்.

(3981)

## விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் ஆதரவில்

கலை பண்பாட்டுக் கழகத்தினரின்

1) "சந்தனக்காடு" (நாடகம்)

சாந்தன் இசைக் குழுவினரின்

2) "போர்க்கால இராகங்கள்"

இடம்: சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானம்
காலம்: 29/02/92 பி. ப. 7.00 மணிக்கு
நடைபெற இருப்பதினால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு: ரூபா 10/- (சி/3980)

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் கரவெட்டி

### கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு கீழ்வரும இடங்களிலிருந்து பொருட்களை ஏற்றி இறக்க லொறிக் கூலி பற்றிய கூறு விலைகளை பொது முகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு முத்திரையிடப்பட்ட உறைகளிலிட்டு 05-03-1992 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

1. கொழும்பு — ஊரியான் ஆனையிறவு
2. ஊரியான் — இயக்கச்சி (வள்ளம்)
3. இயக்கச்சி — கரவெட்டி (கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்)
4. கொழும்பு — கரவெட்டி (கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ, சங்கம்)

(சி 3967)

பொது முகாமையாளர்

## களுத்துறை சிறையிலுள்ள 430பேர் விபரம் தெரிவிப்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது பல்வேறு பகுதிகளில் இருந்தும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சுமார் 430 பேரது பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில்மட்டும்சிறை வைக்கப்பட்டிருப்பவர்களது பெயர்ப்பட்டியலே வெளியிடப்பட்டபட்டியல் ஆகும் ஏனைய இடங்களில் சிறை வைக்கப்பட்டிருப்பவர்களது விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டிய[...] நாளைய பத்திரிகையில் பி[...] சுரமாகும். (ச[...]

### வீரச்சாவு

மோதலில் கப்டன் தாசன் (தம்பிப்போடி விசேந்திரன் - ஏறாவூர், மட்டக்களப்பு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்

எதிர்பாராத விதமாக நேற்று நடைபெற்ற வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கபோராளியானமயிலினி (சின்னத்தம்பிஜீவராணி - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவ்விரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

## 80மில்லியன்ரூப[...] ஒதுக்கிடு

யாழ். மாவட்டத்தி[...] வேண்டிய நிதித்தேவை[...] சுமார் 80 மில்லியன் [...] ஒதுக்கீடு செய்யப்ப[...]ருக்கிறது இதில், அடுத்த மாதம்வரையா[...] கட்டுநிதியாக சுமார் 60 மி[...]லியன் ரூபாவும், இம் மாவட்டத்தின் புனர்வாழ்வுப் பணிகளுக்காக சுமார் 10 மில்லி[...]யன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## விஞ்ஞானபீட முதலாவது அரையாண்டுபரீட்சை-1991

1991 ஆண்டுக்குரிய முதலாவது அரையாண்டுப் பரீட்சை வருகிற (1992) ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 21-03-1992 இற்கு முன்பாக யாழ். பல்கலைக் கழகப் பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களைப் பரீட்சைக் கிளைச் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ. x10 செ. மீ. அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

(சி/3982) பதிவாளர்

## மரண அறிவித்தல்கள்

### திரு. ஆறுப்பிள்ளை முருகுப்பிள்ளை

புதுவீட்டு ஒழுங்கை, காங்கேசன்துறையைச் சேர்ந்த ஆறுப்பிள்ளை முருகுப்பிள்ளை 27-02-92 இல் காலமானார். இவர் திருமதி சிவக்கொழுந்து முருகுப்பிள்ளையின் அன்புக் கணவரும், ராசு, ராணி (திருக்கோணமலை), ஆனந்தம் (கனகலிங்கம்) சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-02-92 இல் உடுவிலில் நடைபெற்றன. இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோமாரன் தோட்டம், உடுவில் கிழக்கு, சுன்னாகம்

தகவல்: திருமதி முருகுப்பிள்ளை

(2248)

### பொன்னையா செல்லம்மா

பொன்னையா - செல்லம்மா புதுத் தோட்டம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்டவரும்இ. பொன்னையாவின் (தெல்லிப்பளை பத்திரிகை விநியோகஸ்தர்) அன்பு மனைவியாரும், சுப்பிரமணியம் பாக்கியம் என்பவரின் அன்புச் சகோதரியும், வசந்தமலர், ஜெயமலர். வசந்தராணி, ஜெயதேவி, விமலதேவி, தவராஜா (சவூதி) என்போரின் அன்புத்தாயாரும், முருகையா கனகலிங்கம், கமலநாதன், குணசேகரம், செல்வராஜா, பராசக்தி என்போரின் அன்பு மாமியாரும், முரளீதரன், கிருபாகரன், பிரபாகரன், பாலதரன், வாசன், மயூரன், ஜெயரூபன், குகரூபன், விஜித்தா, அஜித்த, வினோதா, சிந்துஜா, சுமிதா என்போரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 29-02-92 1-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். தயவு செய்து இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

புதுத்தோட்டம், தெல்லிப்பளை

தகவல்: கணவன், மக்கள், மருமக்கள்

(சி/3979)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.